**கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று (07) பாராளுமன்றத்தில் விடுத்த அறிவிப்பு**

**அறிவித்தல்**

கௌரவ பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபை முதல்வர், ஆளும் கட்சி எதிர்க்கட்சி முதற்கோலாசான், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களே,

சபையில் இணங்கியதற்கு அமைய நேற்றையதினம் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து நடத்திய விவாதத்தில் கருத்துக்களைத் தெரிவித்த ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இருந்தபோதும் இந்த விவாதத்தில் தற்போதை நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பது தொடர்பில் நேர்மறையான கருத்துக்களோ அல்லது தீர்வுகளோ முன்வைக்கப்படாமை கவலைக்குரியதாகும். விவாதத்தை ஆரம்பிப்பதற்கு ஒழுங்குப் பத்திரத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கும்போது அதனைக் குழப்பியமை, இரண்டு தடவைகள் சபையை ஒத்திவைக்க நேர்ந்தமை தற்போதைய சூழலில் இடம்பெறக்கூடாத நிகழ்வுகள் என நான் பார்க்கின்றேன். ஊடகங்களில் பிரசாரம் வழங்கப்படாவிட்டாலும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் முன்வைத்த கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. சபை இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என நான் கருதுகின்றேன். நாம் சகலரும் கட்சி பேதங்கள் இன்றி அரசியல்குறிக்கோள்களைப் பின்தள்ளிவைத்துவிட்டு இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன், சகல உறுப்பினர்களும் சபையில் வழமைபோன்று அரசியல் குறித்த பிரச்சினையை முன்வைத்தமை கவலையளிக்கிறது என்பதை மீண்டும் நினைவுபடுத்தி, இன்றையதினம் இதனை அனைவரும் மனத்தில் கொண்டு விவாதத்தின் இறுதியில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டமொன்றை முன்வைக்கும் வகையில் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.